**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**M.C.O.P.No.10/2024**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ராஜம் |
| தகப்பனார் / கணவர் | .. | பழனி |
| வயது | .. | 53 |
| தொழில் | .. | விவசாயம் |
| கிராமம் | .. | மாமண்டுர் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பிறகு என் மகனை நான் காஞ்சிபுரம், அரசு மருத்துவமனையில் தான் பார்த்தேன் என்றால் சரிதான். இவ்விபத்தில் என் மகனும், எதிரே இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராகுல் என்பவரும் இறந்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களின் உடல்களையும் மருத்துவமனையில் பார்த்தேன். என் மகன் லோட்டஸ் பூட் வேர் கம்பெனியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவருடைய அடையாள அட்டையில் ஈஸ்ட் விண்ட் பூட் வேர் என்று உள்ளது என்றால் சரிதான். என் மகனின் சம்பள பட்டியலிலும் ஈஸ்ட் விண்ட் பூட் வேர் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பள பட்டியலில் எந்த தேதி என்று குறிப்பிடப்பட்வில்லை என்றால் சரிதான். அந்த சம்பள பட்டியலில் கம்பெனியின் மேலாளரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மனுவில் என் மகன் லோட்டஸ் பூட் வேர் கம்பெனியில் பணிபுரிவதாக கூறிவிட்டு சம்பள பட்டியலில் ஈஸ்ட் விண்ட் பூட் வேர் என்ற கம்பெனியின் சம்பள பட்டியல் தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவிற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. என் மகன் முத்து வாகன ஓட்டும் பொழுது ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை என்றால் சரிதான். என் மகன் வீட்டில் இருந்து புறப்படும் பொழுது என்னிடம் கூறிவிட்டு தலைகவம் அணிந்து சென்றார், அவ்வாறு தலைகவசம் அணிந்திருந்தால் என்

மகனுக்கு காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எதிரே வந்த இருசக்கர வாகனம் TN 21 BR 8328 வாகனத்தின் ஓட்டுநர் ராகுலும் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்த நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஓட்டுநர்கள் ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் எந்த வித இழப்பீடும் கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.28.07.2025 எனது நிரூபண வாக்குமூலத்தில் என் மகன் லோட்டஸ் பூட் வேர் கம்பெனியில் பணிபுரிந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரே வந்த ராகுல் ஓட்டி வந்த வாகனத்தால் விபத்து ஏற்பட்டதாக கூறமுடியாது என்றும், என் மகன் ஓட்டி வந்த வாகனத்தால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இருவரும் வேகமாக சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது, அதனால் இருவரும் இறந்துவிட்டனர் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. என் மகனின் பிரேதத்தை வீட்டிற்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வருந்தோம் என்றால் சரிதான். ஆனால் என் மகனின் போக்குவரத்து செலவு ரூ.50,000/– காட்டியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. ஈம காரியங்களுக்காக செலவுக்காக ரூ.1,00,000/– காட்டியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று சொத்து இழப்பு ரூ.1,00,000/– காட்டியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. என் மகன் மாதம் ரூ.18,000/– சம்பளம் வாங்கினார், வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. நான் கோரும் இழப்பீடு அதிகம் என்றும், அதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

**Principal Subordinate Judge,**
**Cheyyar.**